**செய்தி வெளியீடு எண்: 549** **நாள் : 29.10.2014**

உலகத் தமிழ்ச்சங்கம் மதுரை

*சீகன்பால்குவின் தமிழ்ப்பணி*

<u>செய்தி வெளியீடு</u>

முதன்முதலில் தமிழ் நூலை அச்சிட்டு வெளியிட்ட பெருமை கொண்ட செருமானியர் சீகன்பால்கு அவர்களின் தமிழ்ப்பணியினை நினைவு கூரும் வகையில் சீகன்பால்குவின் தமிழ்ப்பணி (தமிழ் அரங்கம் – 4) என்னும் கருத்தரங்கம் உலகத் தமிழ்ச் சங்கத்தின் (மதுரை) சார்பில் 28.10.2014 அன்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் மெரினா வளாகத்திலுள்ள பவளவிழாக் கலையரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறப்பாக தொடங்கப்பட்ட கருத்தரங்கத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் கலந்து கொண்டு கருத்தரங்க நூலினை வெளியிட்டு விழாப் பேருரையாற்றிச் சிறப்பித்தார்.

அவர் தனது உரையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு அனைத்து வகையிலும் தமிழ் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மாணவர்களின் இளமைப் பருவத்திலிருந்தே தாய்மொழி ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்த ஆணையிட்டு அடுத்த தலைமுறையினருக்கும் தாய்மொழி ஆர்வம் தொடர வழிவகை செய்துள்ளது.

தமிழறிஞர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் கபிலர் விருது, உ.வே.சா.விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது, ஜி.யு.போப் விருது, உமறுப் புலவர் விருது மற்றும் தமிழகத்திலும் பிறமாநிலங்களிலும் அயல்நாடுகளிலும் சிறப்பாக செயல்படும் தமிழ் அமைப்பிற்குத் 'தமிழ்த்தாய் விருது' வழங்கி வருகிறது.

சிறந்த தமிழ் மென்பொருள்களை உருவாக்குபவர்களுக்கு 'முதலமைச்சர் கணினித் தமிழ் விருதும்', தமிழ்மொழியை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக 'இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை' எனும் திட்டத்தினையும் செயல்படுத்தி வருகிறது.

உலகத் தமிழ்ச்சங்கம் (மதுரை) கருத்தரங்கத்தின் கட்டுரைகளை நூலாக்கம் செய்து வெளியிட்டுள்ளது. இந்நூல் மேலும் பல ஆராய்ச்சிகளுக்கு வித்திடும். எனவே, இக்கருத்தரங்கத்தின் ஆய்வுக் கட்டுரைகளின் முடிவுகள் உங்களின் ஆய்வுக்கு மேலும் வளம் சேர்க்கும்'' என்று குறிப்பிட்டார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேரா.இரா. தாண்டவன் அவர்கள் தலைமையுரையாற்றினார். அவர் பேசும் போது, ‘‘கொடுந்தமிழ் அகராதி, செந்தமிழ் அகராதி, தமிழ் இலக்கணம் ஆகிய நூல்களுடன் இரட்சிப்பின் ஒழுங்கு, வேத சரித்திரம், ஜெப புத்தகம் போன்ற நூல்களையும் சீகன்பால்கு தரங்கம்பாடி அச்சகத்திலிருந்து அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அவர் வாழ்ந்த கால கட்டத்தில் தமிழுக்கு வளம் சேர்த்த ஐரோப்பியரில் குறிப்பிடத்தக்கவர்.

சீகன்பால்கு அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை ஆய்வு மாணவர்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். சீகன்பால்கு குறைந்த காலமே இப்பூமியில் வாழ்ந்தாலும் 300 ஆண்டுகளைக் கடந்தும் அவரை நாம் பேசுகின்றோம் எனில் அவரின் தமிழுக்கான பங்களிப்பு மட்டுமே என்று சொல்ல முடியும்’’ என்றார்.

தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அரசு செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப, அவர்கள் வழங்கிய கருத்தரங்கச் சிறப்புரையில், ‘‘இந்தியாவில் முதல் அச்செழுத்து வார்ப்புக்கூடமும் அச்சகமும் சீகன்பால்குவால் தரங்கம்பாடியில் தோற்றுவிக்கப்பட்டன. அந்த அச்சகத்தில் தான் தமிழ்மொழி முதன்முதலில் அச்சேறியது. அது சீகன்பால்கு அவர்களின் தலைசிறந்த பணியாகும். சீகன்பால்கு அவர்களின் சீரிய முயற்சியால் 1707ஆம் ஆண்டு ஆகத்து 14ஆம் நாள் இந்திய கிறித்தவர்களுக்கென்று புதிய எருசலேம் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. இவ்வாலயம் 1717இல் விரிவாக்கம் செய்யப்பட்டது. தமிழ் லுத்தரன் திருச்சபைக்காக இவ்வாலயம் மூன்று நூற்றாண்டுகளைக் கடந்து நிற்கின்றது. ஒப்பற்ற பல பணிகளை நிறைவு செய்த சீகன்பால்கு அவர்கள் 1719ஆம் ஆண்டு பிப்ரவரி 23ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்தார். 36 ஆண்டுகளே உயிர் வாழ்ந்த சீகன்பால்கு அவர்களின் தமிழ்ப் பணியோ தமிழ் உள்ளவரை நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. இன்று பல்கிப் பெருகியுள்ள தமிழ் இலக்கிய வரலாறுகளுக்கு முன்னோடியாகத் தமிழ் இலக்கிய வரலாற்றை முதலில் படைத்தவர் சீகன் பால்கு எனவும் தொல்காப்பியம் முதல் இன்று வரை வெளிவந்துள்ள தமிழ்நூல்களுக்கு நூலடைவுத் தொகுதிகளை உருவாக்குவதே சீகன்பால்கு விட்டுச் சென்ற பணியை முழுமை செய்வதாகும்’’ எனவும் தெரிவித்தார்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு.சேகர் சிறப்பு விருந்தினர்களை வரவேற்று உரை நிகழ்த்தினார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத் துறையின் தலைவர் முனைவர் ய.மணிகண்டன் தனது கருத்துரையில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறையின் அமைச்சர் மற்றும் அரசு செயலாளர் ஆகியோரின் கருத்துகளை ஏற்று உரிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதி வழங்கினார்.

கருத்தரங்கத்திற்கு பேராசிரியர் வீ.அரசு, முனைவர் மோசஸ் மைக்கேல் ஃபாரடே, பேராசிரியர் தாமஸ் எட்மண்ட்ஸ், முனைவர் யோ.ஞானசந்திரஜான்சன்,முனைவர் டேனியல், முனைவர் ப.டேவிட் பிரபாகர், முனைவர் விக்டர், பேராசிரியர் அருள்திரு ஜேக்கப் சுந்தர்சிங், முனைவர் க.பசும்பொன், அருள்திரு ஜெயராஜ் ஆகிய அறிஞர் பெருமக்கள் வருகை புரிந்திருந்து கட்டுரைகளை வாசித்தளித்தனர்.

கருத்தரங்கம் என்பது கருத்துகள் அரங்கேற்றப்படும் இடம் மட்டுமல்ல. கருத்துகள் விதைக்கப்படும் இடம். இதுவே ஆய்வுகளுக்கான முதல் களம். 300 ஆண்டுகளைக் கடந்தும் கருத்தரங்கத்தின் நாயகனாய் திகழும் சீகன்பால்கு அவர்களின் தமிழ்ப்பணியினை வெளிக்கொணருவதில் உலகத் தமிழ்ச்சங்கம் மதுரை பெருமிதம் கொள்கிறது என்று கூறிய உலகத் தமிழ்ச்சங்கம் மதுரையின் தனி அலுவலர் (பொ.) முனைவர் க.பசும்பொன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இக்கருத்தரங்கத்தில் இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வு மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**